අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்லை, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 | +94112785818
info@moe.gov.lk | www.moe.gov.lk

මගේ අංකය / எனது இல. / My Ref. ED/09/02/01(11)

ඔබේ අංකය / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2021.09. 20

சுற்றுநிருப இலக்கம் : 18/2021

மாகாண பிரதான செயலாளர்கள்,
மாகாண கல்விச் செயலாளர்கள்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
கோட்ட பிரதிக் / உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
பிரிவெனாதிபதிகள்,
சகல அரச பாடசாலை அதிபர்களுக்கு,

**2020 – க.பொ.த (சாதாரண தரப்) பரீட்சையில் செயற்பாட்டுப் பரீட்சையுடன் கூடிய அழகியல் பாடத்திற்குத் தோற்றிய மாணவர்களை க.பொ.த (உயர்தர தர) வகுப்புகளுக்கு அனுமதித்தல்**

க.பொ.த (உயர்தர தர) வகுப்புகளுக்கு மாணவர்களை அனுமதித்தல் தொடர்பாக இதற்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ள 2008.04.30 திகதிய 2008/17 ஆம் இலக்கத்தைக் கொண்ட சுற்றுநிருபம் மற்றும் இது தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றுநிருப திருத்தங்களுக்கு மேலதிகமானது.

2.0 இச் சுற்றுநிருப அறிவுறுத்தல்கள் 2020 – க.பொ.த (சாதாரண தரப்) பரீட்சையில் செயற்பாட்டுப் பரீட்சையுடன் கூடிய அழகியல் பாடத்திற்குத் தோற்றிய மாணவர்களை க.பொ.த (உயர்தர தர) வகுப்புகளுக்கு அனுமதித்துக் கொள்வதற்கு மட்டுமே பொருந்தும்.

3.0 க.பொ.த (சாதாரண தரப்) பரீட்சை – 2020 பெறுபேறுகளின் படி செயற்பாட்டுப் பரீட்சையுடன் கூடிய அழகியல் பாடத்திற்குத் தோற்றிய மாணவர்களை 12ஆம் தரத்திற்குச் அனுமதித்துக் கொள்வதற்காகக் குறைந்தபட்ச தகைமைகளைத் பொருத்திக் கொள்ள வேண்டிய முறை.

| | தேவைப்படும் குறைந்த பட்ச தகைமைகள் | தகைமைகளைப் பொருத்திக் கொள்ளவேண்டிய முறை |
|---|---|---|
| ஆ | தாய்மொழி மற்றும் கணித பாடம் உள்ளடங்களாக ஐந்து பாடங்களில் இரண்டு திறமைச்சித்திகளுடன் சித்தி பெற்றிருத்தல். | குறைந்தபட்ச தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. |
| ஆ | தாய்மொழி மற்றும் கணித பாடம் உள்ளடங்களாக நான்கு பாடங்களில் இரண்டு திறமைச்சித்திகளுடன் சித்தி பெற்றிருத்தல். | அடுத்த அண்மித்த வருடத்தில் க.பொ.த (சாதாரண தரப்) பரீட்சையில் சித்திபெறாத பாடத்தில் (தாய்மொழி அல்லது கணித பாடம்) பூர்த்தி செய்தல் எனும் அடிப்படையில் அனுமதித்துக்கொள்ள முடியும். |
| இ | கணித பாடத்தில் சித்தி பெறாது ஐந்து பாடங்களில் இரண்டு திறமைச் சித்திகளுடன் சித்திபெற்றிருத்தல். | அடுத்துவரும் இரண்டு வருடங்களுக்குள் க.பொ.த (சாதாரண தரப்) பரீட்சைக்குத் தோற்றி கணித பாடத்தில் சித்தி பெறுதல் எனும் அடிப்படையில் க.பொ.த (உயர்தர தர)த்தில் கலைப்பிரிவு அல்லது உயிரியல் தொழில்நுட்பப் பிரிவில் கற்பதற்கு அனுமதிக்கப் படமுடியும். |

3.1 மேற்படி, 3.0(அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளின் அடிப்படையில் தேவைப்படும் இரண்டு திறமைச்சித்திகளில் ஒன்று இல்லாத சந்தர்ப்பத்தில் மாத்திரம் 2020 - க.பொ.த (சாதாரண தரப்) பரீட்சையில், எழுத்துப் பரீட்சையில் சாதாரண சித்தியைப் பெற்று அப்பாடத்திற்கு பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டத்தின் கீழ் சாதாரணம் அல்லது அதற்கு மேற்பட்ட தேர்ச்சியினைப் பெற்றிருப்பின் அது ஒரு திறமைச் சித்தியாகக் கொள்ளப்படும். இது தாய்மொழி மற்றும் கணித பாடத்திற்குப் பொருந்தாது.

3.2 பாடசாலைப் பரீட்சார்த்தியாக முதற் தடவை தோற்றிய பின்னர் இரண்டாம் தடவையாக க.பொ.த (சாதாரண தரப்) பரீட்சையில் செயற்பாட்டுப் பரீட்சையுடன் கூடிய அழகியல் பாடத்திற்குத் தோற்றிய மாணவரொருவருக்கு மேலே 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி, தகைமைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக முதற்தடவையில் பெற்றுக்கொண்ட பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டத்தின் பெறுபேற்றினைப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

3.3 க.பொ.த (சாதாரண தரப்) பரீட்சையில் செயற்பாட்டுப் பரீட்சையுடன் கூடிய அழகியல் பாடத்திற்குத் தோற்றிய மாணவர்களை க.பொ.த (உயர்தர தர) வகுப்புகளுக்கு அனுமதிக்கும் போது அதி திறமைச் சித்தி அல்லது விசேட திறமைச் சித்தி தேவைகளுக்கும் செயற்பாட்டுப் பரீட்சையுடன் கூடிய அழகியல் பாடங்களில் பெற்றுக்கொண்டுள்ள, பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டத்தின் தேர்ச்சி மட்டத்தினை உரியதாக்கிக் கொள்ள வேண்டும்.

3.4 க.பொ.த (சாதாரண தர) - 2020 பரீட்சையில் செயற்பாட்டுப் பரீட்சையுடன் கூடிய அழகியல் பாடத்திற்குத் தோற்றி, அப் பாடங்கள் உள்ளடங்களாக க.பொ.த (உயர்தர தர) த்தினை கற்பதற்கு எதிர்பார்த்திருப்பின் அப் பாடத்துக்காக பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டத்தின் கீழ் திறமைத் தேர்ச்சி அல்லது அதற்கு மேற்பட்ட தேர்ச்சி மட்டத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும். எனினும், பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டத்தின் கீழ் தேர்ச்சி மட்டம் குறிப்பிடப்பட்டிருக்காத சந்தர்ப்பத்தில் மாத்திரம் அதற்கான அனுமதியை கல்வியமைச்சிடம் (பாடசாலை செயற்பாட்டுக் கிளை) பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

3.5 க.பொ.த (சாதாரண தர) - 2020 பரீட்சையில் செயற்பாட்டுப் பரீட்சையுடன் கூடிய அழகியல் பாடத்திற்குத் தோற்றிய மாணவர்கள் 2021 ஆம் வருடத்தில் க.பொ.த (உயர்தர தரம்) 12ஆம் தரத்தில் அனுமதிக்கும் போது மேற்படி அறிவுறுத்தல்களின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக விதிமுறைகளுக்கு மேலதிகமாக உரிய சுற்றுநிருபங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களும் அவ்வாறே நடைமுறையிலிருக்கும். இச் சுற்றறிக்கையில் எழும் எந்தவொரு பிரச்சினை தொடர்பாகவும் கல்விச் செயலாளரின் முடிவே இறுதியானதாக இருக்கும்.

பேராசிரியர் கே. கபில சீ. கே. பெரேரா
செயலாளர்,
கல்வியமைச்சு

பிரதிகள்:

1. தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு
2. கணக்காய்வாளர் நாயகம்
3. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்
4. பரீட்சை ஆணையாளர் நாயகம்
5. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
6. கல்வியமைச்சின் சகல பதவிநிலை உத்தியோகத்தர்கள்
7. கல்வியமைச்சின் சகல கிளைகளினதும் பிரதானிகள்